**பிப்ரவரி – 16**

# TNPSC துளிகள்

- மக்களவையில் தற்போது உள்ள 10 மொழிகளுக்கான மொழிபெயர்ப்புச் சேவைகளை போடோ, டோக்ரி, மைதிலி, மணிப்பூரி, சமஸ்கிருதம் மற்றும் உருது ஆகிய ஆறு புதிய மொழிகளுக்கும் விரிவுபடுத்த உள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார்.
- எதிர்கால அரசாங்கங்களை வடிவமைத்தல் என்ற தலைப்பிலான 2025 ஆம் ஆண்டு உலக அரசாங்க உச்சி மாநாடு (WGS) ஆனது துபாயில் நடைபெற்றது.
- உலகப் போர்களின் போது வெளிநாட்டு நிலங்களைப் பாதுகாக்கும் பணியில் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த இந்திய வீரர்களின் நினைவாக பிரான்சின் மார்சேயில் உள்ள மசார்கியூஸ் போர் கல்லறைக்கு இந்தியப் பிரதமர் விஜயம் செய்தார்.
- இராஜஸ்தானிலுள்ள 132 ஆண்டுகள் பழமையான ஃபோய் சாகர் ஏரி தற்போது வருண் சாகர் என்றும், 113 ஆண்டுகள் பழமையான மன்னர் எட்வர்ட் நினைவு பவன் ஆனது தற்போது மகரிஷி தயானந்த் விஷ்ராந்த் கிரி என்றும் மறுபெயரிடப் பட்டுள்ளன.
- துளசி கப்பார்ட் அமெரிக்க தேசியப் புலனாய்வு இயக்குநராக பதவியேற்றதையடுத்து, அமெரிக்க உளவுத்துறைக்கு தலைமை தாங்கிய முதல் இந்து என்ற பெருமையினைப் பெற்றுள்ளார், ஆனால் இவருக்கு இந்தியாவுடன் எந்த தொடர்பும் இல்லை.

# தமிழ்நாடு செய்திகள்


## தமிழ்நாடு சிறை விதிகள் 2024




- 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அமலுக்கு வந்த தமிழ்நாடு சிறை விதிகளின் 348வது விதியானது, தாங்கள் முன்கூட்டியே விடுதலை கோரும் ஆயுள் தண்டனை கைதிகளுக்கான விடுதலை கோரல் தகுதி அளவுருக்களை வரையறுக்கிறது.
- இந்தத் திருத்தப்பட்ட ஒரு விதியானது: "பாலியல் குற்றங்களுக்காக அல்லது 2012 ஆம் ஆண்டு POCSO சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற கைதிகள் முன்கூட்டியே விடுதலை செய்யப்படுவதற்கு பரிசீலிக்கப்பட மாட்டாது என்று குறிப்பிடுகிறது.
- தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச் சட்டம் மற்றும் BNS மற்றும் BNSS ஆகிய சில வற்றில் தமிழகத்திற்கு ஏற்ற வகையில் அரசாங்கம் சமீபத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வந்தது.

- சில வகையான பாலியல் குற்றங்களுக்கான தண்டனைகளை மிக கடுமையானதாக ஆக்குவதையும், பாலியல் துன்புறுத்தல் புகார்தாரர்கள் அவர்களின் எதிர்காலத்தில் குற்றம் சாட்டப் பட்டவர்களை எந்த வகையிலும் அவர்களைத் தொடர்புகொள்வதைத் தடுப்பதற்காகவும் சில பாதுகாப்பு உத்தரவுகளைப் பெறுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சென்னையைச் சுற்றி 9 மேம்பாட்டு மையங்கள்




- சென்னையைச் சுற்றியுள்ள ஒன்பது மேம்பாட்டு மையங்களுக்காக என்று புதிய நகர மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்குத் தமிழக அரசு தொடங்கியுள்ளது.
- சென்னையைச் சுற்றி மீஞ்சூர், திருவள்ளூர், திருமழிசை, மாமல்லபுரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மறைமலைநகர், திருநின்றவூர் மற்றும் பரந்தூர் ஆகிய இடங்களில் புதிய நகர மேம்பாட்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.
- இந்தப் புதிய நகர மேம்பாட்டுத் திட்டங்களின் ஒரு நோக்கம் ஆனது, சென்னையில் நெரிசலை நன்கு குறைத்தல், பொருளாதார வளர்ச்சியை அதிகரித்தல், போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல் மற்றும் நகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளின் ஒரு நிலையான மேம்பாட்டினை உறுதி செய்தல் ஆகும்.


# தேசியச் செய்திகள்

## அமெரிக்கா-இந்தியா COMPACT முன்னெடுப்பு


- வாஷிங்டனில் நடைபெற்ற சந்திப்பின் போது அமெரிக்கா-இந்தியா ஆகிய நாடுகள் இந்திய-அமெரிக்க இடையிலான மிகவும் விரிவான மற்றும் உலகளாவிய உத்தி சார் கூட்டாண்மையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன.
- இரு நாடுகளும் '21 ஆம் நூற்றாண்டிற்கான அமெரிக்க-இந்திய COMPACT (இராணுவக்

கூட்டாண்மைக்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல், துரிதப்படுத்தப்பட்ட வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம்)' என்ற புதிய முன்னெடுப்பினைத் தொடங்கின.

- இது "ஒத்துழைப்பின் முக்கியத் தூண்களில் மிகவும் மாறுதல் மிக்க மாற்றத்தினை முன்னேற்றிச் செல்லுதல்" நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அமெரிக்க-இந்திய முக்கியப் பாதுகாப்பு கூட்டாண்மைக்கான இந்தப் புதிய 10 ஆண்டு கட்டமைப்பில் கையெழுத்திட இரு நாடுகளும் திட்டமிட்டுள்ளன.
- திட்டம் 500 ஆனது, 2030 ஆம் ஆண்டிற்குள் இருதரப்பு வர்த்தகத்தினை 500 பில்லியன் டாலராக இரட்டிப்பாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, குறைகடத்திகள் மற்றும் விண்வெளி ஆகிய சில துறைகளில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை ஊக்குவிப்பதற்காக என்று அவை "அமெரிக்கா-இந்தியா TRUST" முன்னெடுப்பினைத் தொடங்கின.
- 26/11 ஆம் ஆண்டு மும்பை தாக்குதல்களுக்காக தஹாவ்வூர் ராணாவை இந்தியாவிடம் ஒப்படைக்க அமெரிக்கா ஒப்புதல் அளித்தது.
- அமெரிக்காவினை மீண்டும் பெருஞ்சிறப்பு உடையதாக்குதல் (MAGA) என்ற அமெரிக்க நாட்டின் தொலைநோக்குத் திட்டமும், இந்தியாவினை மீண்டும் மிகப் பெருஞ்சிறப்பு உடையதாக்குதல் (MIGA) என்ற இந்தியாவின் ஒரு பெரும் கருத்தாக்கமும் இணைந்து ஒரு "மாபெரும் கூட்டாண்மையாக" கருதப்படுகிறது.




## இந்திய எரிவாயுச் சந்தை அறிக்கை – 2030 ஆம் ஆண்டிற்கான கண்ணோட்ட அறிக்கை





- இந்திய எரிவாயுச் சந்தை அறிக்கை: 2030 ஆம் ஆண்டிற்கான கண்ணோட்ட அறிக்கை என்பது சர்வதேச எரிசக்தி முகமையினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் இயற்கை எரிவாயு நுகர்வு ஆனது ஆண்டுதோறும் சுமார் 60 சதவீதம்

அதிகரித்து சுமார் 103 பில்லியன் கன மீட்டர் (bcm) ஆக உயரும் என்றும், எரிவாயு இறக்குமதியானது 2030 ஆம் ஆண்டிற்குள் இரட்டிப்பாகும் என்றும் கணிக்கப் பட்டு உள்ளது.

- இந்தியாவின் இயற்கை எரிவாயு தேவையானது 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில் 10 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு முதல், இந்திய நாடானது அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) நிலையங்களின் எண்ணிக்கையினை சுமார் நான்கு மடங்காகவும், குடியிருப்புகளின் பயன்பாட்டிற்கான எரிவாயு இணைப்புகளை இரட்டிப்பாகவும் ஆக்கியுள்ளது.
- எரிவாயு இடமாற்றக் குழாய் வலையமைப்பு ஆனது 40 சதவீதம் விரிவடைந்துள்ளது.
- இந்தியாவிற்கான திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) இறக்குமதி ஆனது 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 10 சதவீதம் அதிகரித்துள்ளது.
- உள்நாட்டு உற்பத்தியானது, 2023 ஆம் ஆண்டில் நாட்டின் தேவையில் 50 சதவீதத்தினை பூர்த்தி செய்யும் அளவில் இருந்தது என்ற நிலையில் மேலும் இது 2030 ஆம் ஆண்டில் படிப்படியாக 38 பில்லியன் கன மீட்டருக்கும் குறைவாக வளரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## சீனாவில் திருமணங்கள் 2024





- சீனாவில் புதியத் திருமணங்களின் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத அளவிற்குக் குறைந்துள்ளது.
- கடந்த ஆண்டு 6.1 மில்லியன் தம்பதிகள் மட்டுமே தங்கள் திருமணங்களைப் பதிவு செய்தனர் என்ற ஒரு நிலையில் இது 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 20.5% சரிவு ஆகும்.
- இது 1986 ஆம் ஆண்டில் அமைச்சகம் ஆனது, அத்தகையத் தரவுகளை வெளியிடத் தொடங்கியதிலிருந்து பதிவாகிய மிகக் குறைந்த எண்ணிக்கையாகும்.
- கடந்த ஆண்டு பதிவான திருமணங்களின் எண்ணிக்கையானது, 2013 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக பதிவான 13 மில்லியனில் பாதிக்கும் குறைவாகவே இருந்தது.

- அதே நேரத்தில், சுமார் 2.6 மில்லியன் இணையர்கள் விவாகரத்திற்கு விண்ணப்பித்து உள்ளதுடன் இது சற்று அதிகரித்த நிலையில் இது அதற்கு முந்தைய ஆண்டை விட 28,000 அதிகமாகும்.
- கடந்த ஆண்டு பிறப்பு விகிதம் ஆனது, சிறிய அளவில் அதிகரித்த போதிலும், சீனாவின் மக்கள் தொகை தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக குறைந்து வருகிறது.
- வேலைவாய்ப்பினைப் பெறும் வயதுடைய மக்கள் தொகை (16 முதல் 59 வயது வரை) 2024 ஆம் ஆண்டில் 6.83 மில்லியன் குறைந்துள்ளது.
- 60 வயதிற்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கையானது தற்போது மக்கள் தொகையில் 22% பங்குடன் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் செம்பனை எண்ணெய் இறக்குமதி 2025





- எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிறுவனங்கள் ஆனது, மிகவும் ஒரு மலிவான சோயா அவரை எண்ணெயைத் தேர்வு செய்வதால், ஜனவரி மாதத்தில் இந்தியாவின் பாமாயில் / செம் பனை எண்ணெய் இறக்குமதி 14 ஆண்டுகளில் இல்லாத ஒரு அளவுக்குக் குறைந்தது.
- ஜனவரி மாதத்தில் பாமாயில் இறக்குமதியானது, டிசம்பர் மாதத்திலிருந்து சுமார் 45% குறைந்து 275,241 மெட்ரிக் டன்னாக இருந்த நிலையில் இது 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு பதிவான மிகக் குறைவான அளவாகும்.
- செம்பனை எண்ணெய் ஆனது பொதுவாக சோயா அவரை எண்ணெய் மற்றும் சூரிய காந்தி எண்ணெய்களை விட தள்ளுபடி விலையில் வர்த்தகம் செய்யப்படுகிறது.
- ஜனவரி மாதத்தில் சோயா அவரை எண்ணெய் இறக்குமதி 5.6% அதிகரித்து 444,026 டன்னாக இருந்த நிலையில் இது கடந்த ஏழு மாதங்களில் இல்லாத அளவிற்கு அதிக பட்சமாகும் என்பதோடு சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதியானது 8.9% அதிகரித்து 288,284 டன்னாக இருந்தது.
- இந்தியா மிக முதன்மையாக இந்தோனேசியா, மலேசியா மற்றும் தாய்லாந்திலிருந்து செம்பனை எண்ணெயினை மிகவும் அதிகமாக இறக்குமதி செய்கிறது என்பதோடு

மட்டும் அல்லாமல் அர்ஜென்டினா, பிரேசில், ரஷ்யா மற்றும் உக்ரைன் நாட்டில் இருந்து சோயா அவரை எண்ணெய் மற்றும் சூரியகாந்தி எண்ணெயை இறக்குமதி செய்கிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அரபிக் கடலில் புதிய மீன்பிடித் தளங்கள்


- கேரள மாநிலத்தின் கொல்லம் முதல் கோவா மாநிலம் வரையில், இந்திய மீன்வள ஆய்வு நிறுவனம் ஆனது ஒரு விசை மீன்பிடிப் படகைப் பயன்படுத்தி, சுமார் 540 மீட்டர் ஆழத்தில் உள்ள கடல் பகுதிகளை நன்கு ஆய்வு செய்வதற்காக ஆழ்கடல் ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டது.
- இது அரபிக் கடலில் பல அதிக உற்பத்தித் திறன் கொண்ட, இதுவரையில் எந்தவிதச் செயல்பாடுகளும் மேற்கொள்ளப்படாத மீன்பிடித் தளங்களை வெளிப்படுத்தியுள்ளது.
- இந்தப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்தத் தளங்கள் ஆனது, இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலிருந்து சுமார் 100 -120 கடல் மைல் தொலைவில் அமைந்துள்ளன.
- இந்தப் பகுதியானது, ஒரு பகுதிக்கான ஒரு மீன்பிடி முயற்சிக்கு (CPUE) மணிக்கு 150-300 கிலோ என்ற அளவிலான சராசரி மீன்பிடிப்பு திறனைக் கொண்டுள்ளது.




## பருவநிலை இடர் குறியீடு 2025


- இந்தியா தனது பருவநிலை இடர் குறியீட்டு (CRI) தரவரிசையை 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீவிர வானிலை நிகழ்வுகளால் உலகளவில் ஏழாவது மோசமாக பாதிக்கப் பட்ட நாடு என்ற நிலையிலிருந்து, 2022 ஆம் ஆண்டில் 49வது இடத்திற்கு மேம்படுத்தி உள்ளது.
- இருப்பினும், பல ஆண்டுகளாக மிகவும் நீண்ட கால (1993-2022) மதிப்பீட்டில் ஆறாவது மோசமான நாடாக இந்தியா கருதப்படுவதன் மூலம் மிகவும் பாதிக்கப்பட்ட முதல் 10 நாடுகளில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.
- இந்த அறிக்கையின் கண்டுபிடிப்புகள் சுற்றுச்சூழல் சிந்தனைக் குழுவான ஜெர்மன் வாட்ச் வெளியிட்ட 2025 ஆம் ஆண்டு CRI அறிக்கையின் ஒரு பகுதியாகும்.
- 30 ஆண்டுகளில் (1993-2022) பதிவான சுமார் 400 தீவிர வானிலை நிகழ்வுகளில் 80,000 உயிரிழப்பு மற்றும் சுமார் 180 பில்லியன் டாலர்கள் இழப்பு ஏற்பட்டதாக இந்தியா தெரிவித்துள்ளது.
- உலகளவில், 2022 ஆம் ஆண்டு வரையிலான 30 ஆண்டு காலக் கட்டத்தில் ஏற்பட்ட 9,400க்கும் மேற்பட்ட தீவிர வானிலை நிகழ்வுகளால் 7,65,000க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்தனர்.

- இது மொத்தம் 4.2 டிரில்லியன் டாலர் (பணவீக்கத்திற்கு ஏற்ப ஈடு செய்யப் பட்டது) பொருளாதாரச் சேதத்தை ஏற்படுத்தியது.
- 1993-2022 ஆகிய காலக் கட்டத்தில் ஏற்பட்டப் புயல்கள் (35%), வெப்ப அலைகள் (30%) மற்றும் வெள்ளம் (27%) ஆகியவை அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தின.
- இத்தாலி, ஸ்பெயின் மற்றும் கிரீஸ் ஆகியவை கடந்த 30 ஆண்டுகளாக உலகளவில் அதிகம் பாதிக்கப்பட்ட சுமார் 10 நாடுகளில் இடம் பெற்ற மூன்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகளாகும்.
- 1993-2022 ஆம் ஆண்டு பட்டியலில் டொமினிகா, சீனா, ஹோண்டுராஸ், மியான்மர் மற்றும் இத்தாலி ஆகியவை மிகவும் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் முதல் ஐந்து இடங்களில் உள்ள நாடுகள் ஆகும்.
- இந்தியா 1993, 1998 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பேரழிவுகரமான வெள்ளத்தையும், 2002, 2003 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கடுமையான வெப்ப அலைகளையும் எதிர் கொண்டது.




# மாநிலச் செய்திகள்

## மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி




- வடகிழக்கு மலை மாநிலமான மணிப்பூரில் சுமார் இரண்டு ஆண்டுகளாக வன்முறை நிலவி வந்ததால், அரசியலமைப்பு நெருக்கடியைக் குறிப்பிட்டுக் காட்டி குடியரசுத்

தலைவரின் ஆட்சியின் கீழ் அம்மாநிலம் கொண்டு வரப் பட்டுள்ளது.

- 1951 ஆம் ஆண்டிற்குப் பிறகு இம்மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப் படுவது இது 11வது முறையாகும்.
- மணிப்பூரில் கடைசியாக குடியரசுத் தலைவர் ஆட்சி 2001 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் தேதி அன்று தொடங்கி, 277 நாட்கள் வரை நீடித்து 2002 ஆம் ஆண்டு மார்ச் 06 ஆம் தேதி அன்று முடிவடைந்தது.
- 1950 ஆம் ஆண்டில் அரசியலமைப்பு அமலுக்கு வந்ததிலிருந்து, குடியரசுத் தலைவர் ஆட்சி மொத்தம் 134 முறை விதிக்கப்பட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## உலகப் பிறவி இதயக் குறைபாடு விழிப்புணர்வு தினம் - பிப்ரவரி 14




- இது மிதமான அல்லது மிகத் தீவிரமான மற்றும் பிறக்கும்போதே ஏற்படக் கூடிய பிறவி இதயக் குறைபாடு (CHD) பற்றி ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த இதயக் குறைபாடுகள் ஆனது ஒரு குழந்தையின் இதயத்தின் அமைப்பையும் அது செயல்படும் விதத்தையும் பாதிக்கலாம்.
- இந்தியாவில், ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2 லட்சம் குழந்தைகள் பிறவி வகை இதயக் குறைபாட்டு நோயுடன் பிறக்கின்றன.
- இவற்றில் ஐந்தில் ஒரு பங்கு குழந்தைகள் மிக கடுமையான இதய நோயின் மோசமான விளைவுகளை எதிர்கொண்டன.

## இந்தியா எரிசக்தி வாரம் 2025

- மூன்றாவது இந்தியா எரிசக்தி வார (IEW-2025) கொண்டாட்டம் சமீபத்தில் நிறைவு அடைந்தது.
- உலகின் இரண்டாவது பெரிய எரிசக்தி கொண்டாட்ட நிகழ்வு ஆனது, புது டெல்லியின் யஷோபூமியில் நடைபெற்றது.
- இது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் ஆதரவின் கீழ் மற்றும் இந்திய பெட்ரோலிய தொழில் கூட்டமைப்பினால் (FIPI) ஏற்பாடு செய்யப்பட்டது.

- இந்த நிகழ்வு ஆனது எரிசக்தி அணுகல், பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் கார்பன் நீக்க முன்னெடுப்புகளை வலியுறுத்துகிறது.
- இந்தியாவின் முதல் அலை ஆற்றல் சார்ந்த எரிசக்தி சோதனை மீதான திட்டத்தினை மும்பையில் நிறுவுவதற்காக BPCL மற்றும் Eco Wave Power (இஸ்ரேல் நாடு) ஆகியவை இணைந்து மேற்கொள்ள உள்ளன.
- அளவிடக் கூடிய மற்றும் செலவினம் சார்ந்த-போட்டித்தன்மை கொண்ட $CO_2$ பிடிப்பு மற்றும் மாற்றத்தினைச் செயல்படுத்தும் அதன் செயற்கை வினையூக்கி தொழில் நுட்பத்திற்காக UrjanovaC பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் ஆனது Avinya'25 விருதை வென்றுள்ளது.




## இதரச் செய்திகள்

### டோக்ரா கலைப் பொருட்கள்



- இந்தியப் பிரதமர் அவர்கள், பிரான்சின் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் மற்றும் அவரது மனைவி பிரிஜிட் மக்ரோனுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் கைவினைப் பொருட்களைப் பரிசாக வழங்கினார்.
- 4000 ஆண்டுகளுக்கும் மேலான ஒரு நுட்பமான டோக்ரா கைவினைப் பொருள் ஆனது,

சத்தீஸ்கரைச் சேர்ந்த ஒரு பாரம்பரிய உலோக-வார்ப்பு நுட்பமாகும்.

- இந்தக் கலை வடிவத்திற்கு மிகவும் துல்லியமான மற்றும் ஒரு சிக்கலான கைவினைக் கலைத் திறன் தேவைப்படுகிறது என்பதோடு மேலும் இந்தக் கைவினைப் பொருட்கள் பொதுவாக பித்தளை, நிக்கல் மற்றும் துத்தநாக உலோகக் கலவைகளால் ஆனவை ஆகும்.
- செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டிற்காக அவர் அந்த நாட்டிற்கு விஜயம் செய்த போது பிரான்சு நாட்டு அதிபரின் மனைவிக்கு, மிகுந்த வேலைப்பாடுகள் கொண்ட ஒரு வெள்ளிக் கண்ணாடியையும் பரிசாக வழங்கினார்.
- இது இராஜஸ்தானைச் சேர்ந்த கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட நேர்த்தியான கை வேலைபாடுகள் கொண்ட கண்ணாடி ஆகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★